# பெண்கள் ஆளும் மெட்ரோ



சென்னை ஷெனாய் நகர் மெட்ரோ ரயில் நிலையமும் கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையமும் முழுக்க முழுக்கப் பெண்களின் கட்டுப்பாட்டில் வந்துள்ளன. பயணச்சீட்டு, பயணிகளைக் கையாளுதல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் அங்கே பெண்களே இனி மேற்கொள்கிறார்கள். அங்குள்ள சுகாதாரப் பணிகளையும் பெண் ஊழியர்களே மேற்கொள்வார்கள் என மெட்ரோ நிர்வாகம் கூறியுள்ளது. மெட்ரோவை நிர்வகிப்பதில் பெண்கள் ஆண்களைவிடச் சிறந்தவர்களாக இருக்கிறார்கள் என மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது. சென்னையின் அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களும் பெண்களின் கட்டுப்பாட்டில் வரும் நாள் வெகுதொலைவில் இல்லை. பெண்களின் திறமைக்கும் பொறுமைக்கும் கிடைத்த அங்கீகாரம் என இதைச் சொல்லலாம்.